# சென்னை அரசினர் கலைத்தொழில் கல்லூரி

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

## பழமைக்குள் ஒரு பயணம்

**இந்திரன்**



Pt. (N). 2111
N97
24112



# சென்னை அரசினர் கலைத்தொழில் கல்லூரி

. . . . . . . . . . . .

## ப ழ மை க் கு ள் ஒ ரு ப ய ண ம்

இந்திரன்

நன்றி

- எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை
- நவீன கலைக் கூடத்தை அமைப்பதில் துணைநின்ற சென்னை கலைத்தொழில் கல்லூரியின் எல்லா ஆசிரியப் பெருந்தகைகள்.
- நவீன கலைக்கூடத்திற்காக மூலபடைப்புகளைக் கொடுத்துதவிய நல்லிதயங்கள்.

அட்டைப்படங்கள் : 1870 - பிரிட்டிஷ் காலத்து
சென்னை கலைத்தொழில் பள்ளியின்
வகுப்பறை காட்சிகள்.

நூற்பிரதியும் வடிவமைப்பும் : இந்திரன் ©
அச்சு : கிளாசிக் கிராபிஃக்ஸ், சென்னை - 17.
ஒளி அச்சுக்கோர்வை : குறிஞ்சி கிராபிக்ஸ், சென்னை – 24.
வெளியீடு : மார்ச் 1997

அரசினர் கலைத்தொழில் கல்லூரி
(தன்னாட்சி பெற்றது)
31, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 003. ✆ 582478

"

கரடு முரடான பாதைகளில் தடுமாறியபோதும்
எந்தவித முறையீடுகளும் இன்றி
தங்களுக்குப்பின் வரப்போகிறவர்களுக்காக
பாதை அமைத்து கொடுத்து
வருங்கால தலைமுறையினரின்
அழகியல் உணர்வுகளை வடிவமைத்து அதன் மூலமாக
இந்நாட்டின் சமூகத்தைச் செழுமைப்படுத்திய
ஓவியர்களுக்கும் / சிற்பிகளுக்கும்
நவீன கலைக்கூடம் காணிக்கையாக்கப்படுகிறது.
நாம் யார்?
நமது அஞ்சாமை மிக்க கலை முன்னோடிகள் யாவர்?
இன்றைய நிலைமைக்கு நாம் எப்படி வந்தோம்?
நமது நம்பிக்கைகள், செயல்பாடுகள் ஆகியவற்றின்
காரணங்கள் என்ன?
ஆகிய அடிப்படை வினாக்களுக்கு
கலைப்புதையலாக உள்ள கலைக்கூடம்
பதில் சொல்கிறது.
இன்றைய கலைஞர்கள்
பழமையோடு தங்களுக்குள்ள உறவுகளை
மறுஉறுதி செய்து கொள்வதின் மூலமாக
அவர்களது கனவுகளும், கண்டுபிடிப்புகளும்
கலை, வாழ்க்கை ஆகியவற்றில் சிறப்பாகப் பதிவு பெறும்.

"



டாக்டர். அல்போன்சோ அருள்தாஸ்
முதல்வர், சென்னை அரசினர் கலைத்தொழில் கல்லூரி

# வரலாற்றில் முக்கிய ஆண்டுகள்

இந்தியாவிலேயே முதல் தொழிற்கலைப்பள்ளி
சென்னையில் அலெக்சாண்ட்ர் ஹன்ட்டரினால்
தொடங்கப்பட்டது.

**1850**

பிரிட்டிஷ் பொதுக் கல்வித்துறையின்
நேரடிப் பார்வையில் கொண்டு
வரப்பட்டது.

**1852**

எர்னஸ்ட் பி ஹேவல்
என்பவரின் முயற்சியால்
மரக்கடைசல், உலோக வார்ப்படம்,
அரக்குவேலை ஆகியவை அறிமுகம்.

**1877**

தொழில் மற்றும் வாணிபத்துறையின்
கீழ்வந்தபோது பாலகிருஷ்ண முதலியார்
பள்ளியின் சூப்பிரண்டண்டாக வந்தார்.

**1926**

தேவிபிரசாத் ராய் சௌத்திரி
ஓவியப்பள்ளியின் முதல்வராகப்
பணியேற்றார்.

**1929**

கே.சி.எஸ். பணிக்கர் பள்ளியில்
முதல்வராக இருந்தபோது பள்ளி
கல்லூரியாக உயர்வு பெற்றது.

**1962**

சென்னை கலைக் கல்லூரி
தொழில் கல்வித்துறையிலிருந்து
தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைக்கு
மாறியது. தன்னாட்சி பெற்ற
கல்லூரியாக உயர்வு பெற்றது.

**1994**



தேவிபிரசாத் ராய் சௌத்திரி படைக்கும்
முழு உருவச் சிலைக்கு முன் மாதிரியாக
ஜெய்பூர் மகாராஜா நிற்கிறார்

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்....

கிழக்கிந்திய கம்பெனி தனது தொழிற்சாலை ஒன்றை 1639–ல் சென்னையில் கடற்கரையோரம் நிறுவியது.

இந்த இடத்தில் 22ம் நாள் ஏப்ரல் 1640-ல் கோட்டை ஒன்று கட்டி முடிக்கப்பட்டது. இதற்கு செயின்ட் ஜியார்ஜ் கோட்டை என்று பெயரிடப்பட்டது. மசூலிபட்டணத்திலிருந்த ஆங்கிலேயர்களின் தொழிற்சாலை சென்னைக்கு மாற்றப்பட்டது. இந்த கோட்டை கட்டப்பட்ட பிறகு நெசவாளர்கள், துணிகளில் படம் வரைபவர்கள், அலங்கார பூவேலைகளை அச்சுகளாக பதிப்பவர்கள் என்று முன்னூருக்கும் அதிகமான குடும்பங்கள் சென்னையில் வந்து குடியேறின. இப்போது கோட்டை கட்ட நிலம் வழங்கிய தமர்லா சகோதரர்களின் தந்தையார் சென்னப்ப நாயக்கரின் பெயரால் நகரம், சென்னப்ப பட்டணம் என்று அழைக்கப்படலாயிற்று.

கோட்டை கட்டிய ஐந்து ஆண்டுகளுக்குக்குள்ளேயே சென்னையில் அவர்களின் செல்வாக்கு உயர்ந்தது. இதனால் ஆங்கிலேயர்களுக்கு மேசை நாற்காலிகள், பூவேலைப்பாடுள்ள துணிமணிகள் போன்றவற்றைச்செய்து பணம் சம்பாதிக்க சென்னையில் மக்கள் வந்து குடியேறியபடி இருந்தனர்.

22ம் நாள் செப்டம்பர் 1968-ல் சென்னைக்கென்று தனியான நகராட்சியை அமைத்தார்கள். ஒரு மேயரையும் நியமித்தார்கள். இதற்கென நகரமக்களிடம் வீட்டுவரி வசூலிக்கும் அளவுக்கு ஆங்கிலேயர்கள் ஆட்சி அதிகாரம் பெற்றுவிட்டனர்.

இடையில் மூன்றாண்டு காலம் (1749-52) சென்னையை பிரெஞ்சுகாரர்கள் கைப்பற்றி வைத்திருந்தபோதும், மீண்டும் ஆங்கிலேயர்கள் சென்னையைக் கைப்பற்றி ஆளத்தொடங்கிவிட்டனர்.

சென்னை ஒரு தனி ராஜதானியாக (Madras Presidency) பிரிட்டிஷ்காரர்களால் பிரிக்கப்பட்டிருந்தது. 'மதராஸ் ராஜதானி' என்பது இன்று ஆந்திரா, கேரளா, கர்னாடகா என்றழைக்கப்படும் மாநிலங்களின் பல பகுதிகளையும் உள்ளடக்கி இருந்தது. இதனால் அன்றைய காலகட்டத்து சென்னையில் நிகழ்ந்த கலை முயற்சிகளில் தென்னிந்தியாவின் பெரும்பகுதியும் ஈடுபட்டது என்று சொல்லலாம். உள்நாட்டு கைவினை கலைகளை ஊக்கப்படுத்தும் நோக்கோடு பிரிட்டிஷ்காரர்கள் இந்தியா முழுவதும் கைவினை கலைப்பள்ளிகளைத் தொடங்கியபோது, மதராஸ் ராஜதானியின் தலைநகராக இருந்த சென்னையிலும் ஒரு கைவினை கலைப்பள்ளி தொடங்கப்பட்டது. மே மாதம் 1850–ல் சென்னையில் 'தொழிற் கலைப் பள்ளி' (School of Industrial Arts) ஒன்று அலெக்ஸாண்டர் ஹண்டரினால் தொடங்கப்பட்டது. கலை மற்றும் கைவினை மரபுகளை மேலும் சிறப்படைய வைக்க தமிழகத்தில் கைவினைஞர்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பாக இது அமைந்தது எனலாம்.



சென்னையின் கலை வரலாற்றில் இந்த பள்ளியின் தொடக்கம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். 1852–ல் அந்த பள்ளியை பொதுக் கல்வித்துறை ஏற்றுக் கொண்டபோது, ஹண்டர் புதிய பாடத்திட்டங்களைக் கொண்டுவர முயன்றார். இதற்கென லண்டனில் உள்ள 'ராயல் அகாடமி ஆஃப் ஆர்ட்' போன்றவற்றுடன் கலந்தாலோசித்து புதிய கலைக்கல்வியின் எதிர்காலம் குறித்து ஆராய ஒரு நிபுணர் குழுவை நியமித்தார். இந்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளின்படி தொழில் கல்வி காண அரசு தொழிற்கல்விபள்ளி (The Government School of Industiral Arts) ஒன்றை நிறுவியது.

இந்தியாவின் முதல் விடுதலைக்குமுறுலான 'சிப்பாய் கலகம்' நிகழ்ந்த பிறகு, கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து இந்தியாவின் ஆட்சி பிரிட்டிஷ் பார்லிமெண்டின் கைக்கு மாற்றப்பட்டது. அன்று இங்கிலாந்தின் அரசியாக இருந்த எலிசபெத் மகாராணி இந்தியாவுக்கும் பேரரசியானார். இந்த மாற்றம் இந்தியக் கலைகளை வளர்ப்பதில் பிரிட்டிஷ்காரர்களுக்கு அதிக அக்கறையையும், வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

சென்னையில் தொழிற்கலைப் பள்ளியில் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருள்கள் அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் பங்கெடுத்துக்கொண்டன. இதனால் தமிழகத்தின் சொந்தக் கலைமரபுடன், ஐரோப்பிய, பாரசீகக் கலைமரபுகளின் கலப்பும் நிகழ்ந்தது. சென்னையில் தயாரிக்கப்பட்ட கலை நேர்த்திமிக்க மேசை நாற்காலி போன்றவற்றுக்கு இங்கிலாந்தின் மேட்டுக்குடியினரிடையே தனியான மதிப்பு ஏற்பட்டது.

இங்கிலாந்திலிருந்து ஓவியக்கலைஞர்களும், கைவினை நிபுணர்களும் சென்னைக்கு வந்தனர். அவர்களில் சிலர் சென்னை கலைப்பள்ளியின் தலைமைப் பொறுப்பை (Superintendent) ஏற்றனர்.

இவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் எர்னஸ்ட். பி. ஹேவல் (Earnest. B. Havel). இவர் இந்தியக் கைவினைப் பொருள்களைச் சேகரிப்பதிலும் கைவினை மரபுகளை இந்த மண்ணுக்கே உரிய முறையில் வளர்த்தெடுப்பதிலும் தனி அக்கறை கொண்டிருந்தார். 1877–ல் சென்னை கலைப்பள்ளியில் மரக்கடைசல், தச்சுவேலை, உலோக வேலைப்பாடுகள் போன்றவற்றை கற்பதற்கான வசதிகளை அதிகரித்தார்

நாளடைவில் இந்தியாவில் விடுதலை உணர்வு தலை தூக்கியது. இப்போது பிரிட்டிஷ்காரர்கள் பாலகிருஷ்ண முதலியார் எனும் ஒரு இந்தியரை கலைப்பள்ளியின் தலைவராக நியமித்தனர். இவர் கலைப்பள்ளியுடன் நீண்டகாலம் தொடர்பு கொண்டிருந்தார். இவருக்குப் பிறகு 1929–ல் தேவி பிரசாத் ராய் சௌத்திரி பள்ளியின் முதல்வரானார். இவர் ராஜாரவிவர்மாவைப் போல் ஒரு மேட்டுக்குடிமனிதர். ஆனாலும் புரட்சி மனப்பான்மை கொண்டவர். எளிமையாகப் பழகி மாணவர்களை உற்சாகப்படுத்தியவர். இவரை ஒரு வரலாற்று ரீதியான கலைஞர் என்றே சொல்லாம். சென்னையிலுள்ள 'உழைப்பாளர் சிற்பம்', டெல்லியிலுள்ள 'விடுதலை வீரர்கள் சிற்பம்' போன்ற காலத்தோடு ஒட்டிய படைப்புகளைச் செய்தார். இந்திய விடுதலைக்கு முன்னரும், பின்னரும் முதல்வராக இருந்த இவர் காலத்தில் சென்னை கலைத்தொழில்பள்ளி அகில இந்திய அளவில் பெயர் பெற்றது.

1962–ல் கே.சி.எஸ். பணிக்கரின் காலத்தில் இந்நிறுவனம் பள்ளி என்றி நிலையைக் கடந்து கல்லூரி எனும் உயர்வைப் பெற்றது. உலக நாடுகள் பல சுற்றிய பணிக்கர் பழுப்பு, கருப்பு போன்ற வண்ணங்களைக் குறைத்து பளிச்சிடும் வண்ணங்களோடு கூடிய நவீன படைப்புகளைச் செய்தார். இந்த கால கட்டத்தில் ஐரோப்பிய ஓவிய உலகில் பல புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்தன. இவற்றைப் பிரதிபலிக்கும் விதத்தில் பணிக்கர் மாணவர்களை நவீன வெளிப்பாட்டு முறைகளில் ஊக்கப்படுத்தினார்.

இவருக்குப் பிறகு கல்லூரிப் பொறுப்பை ஏற்ற எஸ். தனபால் தென்னாட்டு ஓவிய / சிற்ப மரபுகளுடன் கூடிய படைப்புகளுக்கு உற்சாகம் கொடுத்தவர். இவரால் தயாரிக்கப்பட்ட மாணவர்கள் சித்தன்னவாசல், லெபாக்ஷி ஓவியங்கள் ஆகியவற்றின் கலை மரபுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டனர்.

தமிழகத்து நவீன கலை, தமிழ் மண்ணின் அடையாளங்களுடன் கூடியதாகவும் மாறியது. இவர்களுக்குப் பின்னர் வந்த கலை மேதமை கொண்ட பல ஆசிரியர்களும், முதல்வர்களும் தமிழகத்தில் கலை இயக்கம் ஒன்று தீவிரப்பட சலியாது உழைத்திருக்கிறார்கள். தமிழகத்தின் கலை வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் சென்னை கலைத்தொழில் கல்லூரி தமிழகத்து கலை இயக்கத்தின் அச்சாணியாக இயங்கி வந்திருப்பதை உணரலாம் ●



## தேவிபிரசாத் ராய் சௌத்திரி
1899–1975

இந்தியாவின் மாபெரும் சிற்பிகளில் ஒருவர். குத்துச்சண்டை வீரர். வேட்டைக்காரர். நூலாசிரியர். 1929–லிருந்து 1957 வரை சென்னை கலைப்பள்ளியின் தலைமைப் பொறுப்பை ஏற்று தமிழகத்து கலை வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவர். கிழக்கு வங்காளத்தில் தேஜ்காத் எனும் ஊரில் பிறந்தவர். அபணிந்திரநாத் தாகூரிடம் கலை பயின்றவர். பிறகு இத்தாலிய ஓவியர் சிக்னர் பாய்ஸ் (Signor Boiess) என்பவரிடம் மேலை ஓவிய நுணுக்கங்களைக் கற்றவர். 'இந்தியன் சொசைட்டி ஆஃப் ஓரியண்டல் ஆர்ட்' எனும் நிறுவனத்தில் கலையை போதிக்கத் தொடங்கினார். இதற்கிடையில் ஹிரன்மாய் ராய் சௌத்திரியின் கீழ் பணிபுரிந்தார். பிரிட்டிஷ் அரசு அவரது உயர்ந்த கலை பங்களிப்பிற்காக எம்.பி.இ. (M.B.E.) பட்டமளித்தது. 1953–ல் லலித்கலா அகாடமியின் முதல் தலைவரானார். ஐக்கிய நாடுகள் சபை டோக்கியோவில் நடத்திய கலை கருத்தரங்கின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ரவீந்திரபாரதி பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். இந்திய அரசினால் 'பத்மபூஷன்' விருதளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். வங்காள கலை பாணியிலிருந்து முற்றிலும் விலகிய மேலைநாட்டு தாக்கம் கொண்ட ஒரு பாணியை இவர் கைக்கொண்டிருந்தார். சென்னை மெரினா கடற்கரையிலுள்ள 'உழைப்பாளர் சிலை' 'காந்தி சிலை' ஆகியவை இன்றும் இவர் பெயர் சொல்பவை.





**கே.சி.எஸ். பணிக்கர்**

**1911–1977**

சென்னை கலைப்பள்ளியின் துணைத்தலைவராக 1953–ல் பங்கேற்று 1957–ல் அதன் முதல்வராகப் பொறுப்பேற்றவர். 1967–ல் ஓய்வு பெற்றதுவரை சென்னை கலைப்பள்ளிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தகுந்தது. கோயமுத்தூரில் பிறந்தவர் – 1962ல் இவர் தலைவராக இருந்தபோதுதான் சென்னை கலைப்பள்ளி, கலைக்கல்லூரியாக உயர்வு பெற்றது. சென்னையின் கலை இயக்கத்திற்கு இவரது மிகப்பெரிய பங்களிப்பாக, இவர் சென்னை ஈஞ்சம்பாக்கத்தில் கடலோரத்தில் 1966ல் நிறுவிய 'சோழ மண்டலம் ஓவியர் கிராம'த்தைச் சொல்லலாம். 1978–ல் கேரளத்து அரசு அருங்காட்சியகம், 'பணிக்கர் கலைகூடத்தை' திறந்து வைத்தது. உலக கலை காங்கிரசுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றவர். இவர் தனது தொடக்கநிலை நீர்வண்ண, ஓவியங்களைக் கடந்து, நவீனமான வெளிப்பாடுகளைத் தேடினார். சித்திர எழுத்துக்களை சீன ஓவியங்களில் பயன்படுத்துவதுபோல, எழுத்துக்களைப்போல் காட்சி அளிக்கும் (அவை எந்த மொழியையும் சார்ந்தவை அல்ல) வரிக்கோடுகளை பயன்படுத்தினார். தமிழகத்து கலை இயக்கத்திற்கு நவீனமான வீச்சை உண்டாக்கியவர் என்று இவரைச் சொல்லவேண்டும்.





அருங்காட்சியகத்தின் ஒரு காட்சி




1852–ல் பூந்தமல்லி சாலையில் செங்கல் உற்பத்தி கிளை ஒன்று தொடங்கப்பட்டது.



ராய் சௌத்திரி படைத்த சிற்பம்



கண்ணாடியில் வண்ண ஓவியம்



இங்கிலாநதிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள்
வரைந்த கரிக்கோட்டுச் சித்திரம்



சுண்ணாம்பு கலந்த சிற்ப வேலைப்பாடு



மாரச்செதுக்கு வேலை



கிருஷ்ணாராவ்

கலாவிபூஷன் கிருஷ்ணாராவ் 1968-ல் சென்னை கலைக்கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்றார். 1938-ல் மதுரையிலிருந்து வந்த இவர் சென்னை ஓவியப் பள்ளியில் பயின்றவர். 1945-ல் இரண்டாம் உலகப்போரைக்குறிக்கும் வேலையில் இருந்தார். 1948-ல் சென்னை ஓவியப் பள்ளியின் துணை முதல்வரானார். 1971-ல் சென்னை கலைக்கல்லூரி முதல்வர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபிறகு சென்னை கலாக்ஷேத்ராவின் கலைப்பரிவு இயக்குனர் பதவியேற்றார் .

இவரது ஓவிய உலகம், மாட்டு மந்தைகள், கோயில்காட்சிகள், புண்ணியநதிக்கரைகள் ஆகியவற்றால் நிரம்பியது. இவரது நீர்வண்ண ஓவியங்களும், கோட்டுச் சித்திரங்களும் மதுரை, திருப்பரங்குன்றம், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர் ஆகிய இடங்களைக் கண்முன் நிறுத்துபவை.





**எஸ். தனபால்**

**செ**ன்னை கலைத்தொழில் கல்லுரியின் முதல்வராக 1972ம் ஆண்டில் பதவியேற்றவர். 1919-ல் சென்னையில் பிறந்தவர். ஓவியம் மட்டுமின்றி சக கலைகளான நடனம், இசை ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டவர். பிரபலமான சிற்பி. சென்னை கலைப்பள்ளியில் பயின்ற நாள்களில் நந்தலால்போஸ், ககனேந்திரநாத் போன்றவர்களால் பாதிக்கப்பட்டு, சீன ஓவிய மரபுகளின் தாக்கங்களுடன் கூடிய சிறந்த ஓவியங்களைப் படைத்தவர். 1958-ல் தில்லியில் நடைபெற்ற சமகாலச் சிற்பிகள் கண்காட்சியில் இடம் பெற்ற ஒரே தமிழ்நாட்டுச் சிற்பி இவர். 1962-ல் காமன்வெல்த் கண்காட்சியில் இவர் படைப்புகள் இடம் பெற்றன. 1941–ல் சென்னை கலைப்பள்ளியின் நுண்கலைப் பிரிவு ஆசிரியரானார். 1977ல் கல்லூரி முதல்வர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற இவர், இன்று கலாக்ஷேத்ராவின் கலைப்பிரிவு இயக்குனராக பணியாற்றி வருகிறார். இவரது 'ஔவையார்', 'ஈ.வே.ரா பெரியார்' போன்ற சிற்பங்கள் மக்களால் பேசப்பட்டவை. தமிழ்த்தனமான கலைவெளிப்பாட்டு முறைகளில் சிறந்து விளங்கிய இவர், தமிழ் ஓவிய இயக்கத்திற்கு முக்கிய பங்காற்றியவர்.





கே. சீனிவாசலு

தமிழ்நாட்டில் மக்களின் ஓவிய மரபுகளைத் தங்கள் படைப்புகளில் கையாண்டவர்களில் மிக முக்கியமான ஓவியர். இவர் 1923–ல் பிறந்தவர். 1937–ல் சென்னை கலைப்பள்ளியில் சேர்ந்து மேலைநாட்டு நீர்வண்ண ஓவிய முறைகளில் கைதேர்ந்தார். ஓவியப் படிப்பை முடித்தபிறகு அடையாறு, பிரம்மஞான சபையில் பள்ளி ஆசிரியராகச் சிறிதுகாலம் பணியாற்றினார். இதனால் இந்தியத்தனமான கலை வெளிப்பாடுகள் குறித்து அதிகம் ஈர்க்கப்பட்டார். மேலும் 1948 – 51களில் ஹிந்துபூருக்கு அருகிலுள்ள லெபாக்ஷி சுவரோவியங்களை நகலெடுக்கும் பணிகளில் ஈடுபட்டார். இலங்கையின் 'சிக்கிரியா' என்னுமிடத்தில் உள்ள ஓவியங்கள், தஞ்சையின் சுவரோவியங்கள் ஆகியவற்றையும் நகலெடுக்கும் பணியில் ஈடுபட்டார். இவற்றால் இவரது கலை வெளிப்பாடு புதிய பாதிப்புகளுக்குள்ளானது. ஆந்திராவைச் சேர்ந்த இவர் கொண்டபள்ளி, திருப்பதி தோல் பொம்மைகள் ஆகியவற்றின் பாணியில் மக்கள் கலைமரபின் மணங்கமும் ஓவியங்களைப் படைத்து பெயர் பெற்றார்.





ஏ.பி. சந்தானராஜ்

உன்னதமான ஓவியரான இவர் 1990 இல் சென்னை கலைத்தொழில் கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்றார். இவர் 1932–ல் திருவண்ணாமலையில் பிறந்தவர். 1948–ல் அதே கல்லூரியில் சேர்ந்து பயின்று மாணவப் பருவத்திலேயே நுண்கலையின் சிறப்புக்காக தங்கப்பதக்கம் வென்றவர். 1958–ல் அதே கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். மேலும் கும்பகோணம், கேரளாவில் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் கலைக்கல்லூரிகளில் பேராசிரியராகப் பணி புரிந்தவர்.

இவரது ஓவியப்படைப்புகளுக்காக 1957, 1963 ஆண்டுகளில் இருமுறை தேசிய விருது பெற்றவர். இவரது கலைப்பணியைப் பாராட்டும் விதமாக தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு 1987–ல் இவருக்கு ‘கலைச்செம்மல்’ விருது வழங்கியது.

இவரது ஓவியப்படைப்புகள் தமக்கென தனியான ஒரு பாணியை கைக்கொண்டவை. பலவிதமான கலை சாதனங்களையும் திறமையுடன் கையாளும் மேதமை கொண்ட இவர் ஆழமான வரைகலை கொண்டவர்.





எல். முனுசாமி

1927–ல் சென்னையில் பிறந்தவர். கலைத்தொழில் கல்லூரியின் முதல்வராகப் பதவியேற்றுச் செயல்பட்டவர். தனக்கென தனிப்பட்ட கலை நேர்த்திமிக்க கலை வெளிப்பாட்டைக் கொண்டிருந்த இவர் 1948ல் சென்னை கலைக் கல்லூரியிலேயே பயின்றவர். 1968ல் தேசிய விருது பெற்றார். இவரது சிறந்த கலைப்பணிக்காக தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு இவருக்கு 'கலைச்செம்மல்' விருது வழங்கி பாராட்டியது.

தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை அகவயமான ஒரு பார்வைக்கு உட்படுத்தியவர், வடிவங்களின் சாராமாக உள்ளவற்றில் அதிக கவனம் செலுத்தியதால் இவரது படைப்புகள் தனித்துவமான ஒரு கலைமொழியைப் பேசுபவை. கோடுகள் ரீதியாக உருவங்களை வரையறுக்கும்போது, வழக்கமான முறைகளைப் பின்பற்றாமல் ஆழ்ந்த உணர்வுகளின் வழியாக பேசக்கூடிய ஒரு அபூர்வ வெளிப்பாட்டு முறையைக் கைக்கொண்டவர்.





சி.ஜெ. அந்தோணிதாஸ்

சென்னையில் 1933–ல் பிறந்தவரான இவர் ஓவியக்கலையில் சிறந்தவர். கலைத்தொழில் கல்லூரியில் 1954–ல் பயின்ற பிறகு அதே கல்லூரியில் கலை கற்பிப்பவராக பணியாற்றினார். பிறகு சென்னை கலைத்தொழில் கல்லூரியில் முதல்வரானார். 1961–ல் பாரிசில் நடந்த சர்வதேச கலைகண்காட்சி மெக்சிகோவின் சாவ் பாவ்லோவில் 1967 நடந்த கண்காட்சி, இந்தியக் கலையின் 25 ஆண்டுக்கால கண்காட்சி ஆகியவற்றில் பங்குகொண்டவர். உருவரீதியான ஓவியங்களைத் தீட்டுவதில் கைதேர்ந்தவரான இவர் 1961–ல் தேசிய விருது, 1985–ல் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் கழக விருது பெற்றவர். 1989–90–ல் 'கலைச்செம்மல்' விருது பெற்று கௌரவிக்கப்பட்டவர்.





எஸ். முருகேசன்

1933–ல் மதுரையில் பிறந்தவரான இவர் சென்னை கலைத்தொழில் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றியவர். டெல்லியில் நடைபெற்ற சர்வதேச கலைக்கண்காட்சி முதற்கொண்டு பல்வேறு கண்காட்சிகளில் பங்கு கொண்டவர். இவரது கலைப்படைப்புக்காக தேசிய விருது பெற்றவர். இவரது மரச்சிற்பங்கள் வடிவங்களின் மீது இவர் கொண்டிருக்கும் தனியான ஒரு பார்வை ரீதியான புரிதலின் வெளிப்பாடாகும்.



ஆசிரியர் பற்றி....

**இந்திரன் (1948)** தமிழகத்தின் முக்கிய கலை விமர்சகர். கவிஞர். மொழிபெயர்ப்பாளர். 20 ஆண்டுகளாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வருபவர். 15க்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவரது தமிழ் அழகியல் (1994), தற்கால கலை – அகமும் புறமும் (1996), 'The Living Art' (1992), Man and Modern myth - A Dialogue (1994) ஆகிய கலை பற்றிய நூல்கள் குறிப்பிடத்தகுந்தவை. திருவடி மலர்கள் (1972), அந்நியன் (1982), முப்பட்டை நகரம் (1991), சாம்பல் வார்த்தைகள் (1994), Syllables of Silence (1982), The Acrelyic Moon (1997) ஆகியவை கவிதைத் தொகுப்புகள். அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம் (1994), காற்றுக்குத் திசை இல்லை (1986), பசித்த தலைமுறை (1994), பிணத்தை எரித்தே வெளிச்சம் (1995) ஆகியவை முக்கிய மொழிபெயர்ப்புகள் இவரது கவிதைகள் பிரெஞ்சு, கிரேக்கம், டச்சு, மலையாளம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.





பாலகிருஷ்ண முதலியார்

